பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர்: 14] சென்னை: வைகாசி 20உ (3—6—67) சனி ★ வெளியூர்: வைகாசி 21உ (4—6—67) ஞாயிறு [இதழ்: 294

அரசாங்க விளம்பர பொறுப்பு

தனியாரிடம் விடப்படும்

"அரசாங்கத்தின் கொள்கைகள், திட்டங்கள் முதலியவற்றை விளம்பரப்படுத்தும் பொறுப்பு இனிமேல், ஊதியம் பெறும் அதிகாரிகளிடமில்லாமல் அதிகாரச் சார்பற்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

பிறை--முழு நிலவாகியிருக்கிறது!

தோன்றி மறையும் மின்னல் அல்ல கழக ஆட்சி!

புத்தாட்சி கண்டவர்களுக்கு அதனைக் கட்டிக்காக்கும் கடமையும் உண்டு

கழகத் தோழர்கட்கு அமைச்சர் கருணாநிதி அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 3—

"அவசரப்பட்டு ஆட்சிக்கு வந்தவர்களல்லர் நாம்; நல்ல காலம் வரும் வரையில் காத்திருந்தோம்—பொறுத்திருந்தோம்.

"1949-ம் ஆண்டில் கண்ணீருடன், கொட்டும் மழையில் சென்னையில் பிறந்த கழகம்தான் இன்று—18-ஆண்டு இடைவெளிக்குப் பிறகு—தமிழகத்தை ஆளும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது.

"1952-ம் ஆண்டு தேர்தலில் நாம் நேரடியாகப் போட்டியிடவில்லை; நம்முடைய ஆதரவைத்தான் சிலருக்குத் தந்தோம்; 1957-ம் ஆண்டு நடந்த தேர்தலில் 'நம்மவர்' என, பதினைந்து பேர் வந்தோம்; அதுவே 1962-ம் ஆண்டில் 50 ஆகி—இப்போது 138 என ஆகியிருக்கிறது.

"பிறைச் சந்திரன் முழு நிலவாகியிருக்கிறது! திடீரென்று தோன்றி ஒளி காட்டி மறையும் மின்னலல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்!

"எனவே, இந்த ஆட்சியை அழித்துவிட காங்கிரசிலே உள்ள எவ்வளவு பெரியவர்கள் முயன்றாலும் முடியாது!"

என்று பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், நேற்று மாலை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற குமாரி விசயாவின், 'ஆளுகின்றார் அண்ணா' என்ற கலை நிகழ்ச்சியின் அரங்கேற்றத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரைத் தென்னகப் பல்கலைக் குழுவினர் சார்பில் தோழர் மு. வரதராசன் வரவேற்றார்.

சென்னை மாவட்டச் செயலாளர் நீல நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோரும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினைப் பாராட்டிப் பேசினர்.

அமைச்சர் மு. கருணாநிதி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கசப்பான உண்மைகளைக்கூட நகைச்சுவை ததும்ப எடுத்துச் சொல்வதில் ஈடு இணையற்றுத் திகழ்ந்தவர் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள். இப்போது இருக்கும் மாபெரும் நகைச்சுவை நடிகர்கள்கூட, அவரது வழி வந்தவர்கள்தாம்; எனவே, எந்த ஒரு கலை நிகழ்ச்சியும், இதுபோல் அவருக்குத் தெரிவிக்கும் வணக்கத்துடன் துவங்குவது சரியான காரியமாகும்.

கலைவாணரின் இறுதிச் சடங்கு நடைபெற்றபோதுகூட, பலர் பேசியதற்கு மத்தியில் நானும் குறிப்பிட்டேன்-'இனித் தமிழகத்தில் நடைபெறும் எல்லா கலை—நாடக நிகழ்ச்சிகளும், கலைவாணருக்கு வணக்கம் தெரிவித்து விட்டுத்தான் துவங்க [illegible]ண்டும்' என்று!

[illegible]ாட்டில் தெரிவித்ததை அங்[illegible]ய புதைத்து விடாமல், [illegible]னகப் பல்கலைக் குழுவினர் [illegible]லால் கடைப்பிடித்துவருவது [illegible]ட்டத்தக்கது.

[illegible]க்கு வந்துவிட்டதாலேயே [illegible]த்தின் கடமை முடிந்து [illegible]பில்லை; இனித்தான் நிரம்ப இருக்கிறது! புதிய அரசை உருவாக்கிய நீங்கள் அதைக் கட்டிக் காக்கவும் கடமை பெற்றிருக்கிறீர்கள்!

கழகத்தின் ஆட்சியை வலுப்படுத்தவும் வளப்படுத்தவும் நீங்கள் ஒவ்வொருவரும் பிரச்சாரகர்களாக மாறவேண்டும்!

இந்தக் கலை நிகழ்ச்சியைநடத்திய தங்கை விஜயாவையும் கேட்டுக்கொள்வேன்— அண்ணாவின் ஆட்சியில் விலைவாசிகள் குறைந்து வருவதைப் பாடிக் காட்டுவதைப்போலவே அவரது கலை நிகழ்ச்சிக்கான கட்டணத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டும்.

குறைந்த செலவில் கலைநிகழ்ச்சி நடைபெறுவது கழகத்துக்குத்தான் வலிவு!

'என்ன அண்ணா-இரயிலுக்கு அதிகப்படியான கட்டணம் கொடுத்துச் செல்ல வேண்டியதிருக்கிறதே' என்றால், அவருக்கு நான் சொல்வேன்—அப்படியானால் சகோதரி தமிழக பஸ்களுக்குக் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோம்; அதில் ஊர் ஊராகச் சென்று, இதுபோன்ற கலை நிகழ்ச்சிகளை மக்கள் மத்தியில் நடத்தவேண்டும்' என்று!

ரூ. 400 கோடி கடன் வாங்கியும் மக்களுக்கு வாழ்வளிக்க முடியவில்லை— இதுகாறும் நம்மை ஆண்டவர்களால்!

ஒரு இருபது ஆண்டுகளுக்கு 200 கோடி நட்டத்தை ஏற்றுவது, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட முயலுவோம் என்றால், அதற்குத் தடையாக இருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள்—மறுப்புக்களை எழுப்புகிறார்கள்!

தோற்றுப்போன ஆத்திரத்தில் அவர்கள் ஏதேதோ பேசுகின்றனர்!

வசை பாடுகிறவர்களையும் வாழ்த்திப் பழக்கப்பட்டவர்கள் நாம்! எனவே அவர்களைப் பேச விடுங்கள்!

அப்படிப் பேசுகிறவர்களைப் பற்றி நாம் ஏதும் பேச வேண்டாம்; அவர்கள், பேசியவைகளுக்கு மாறாக, நமது கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள்.

அதற்கு இதுபோன்ற கலை நிகழ்ச்சிகள் எத்துணை வந்தாலும் பயன்படும்.

இந்த வகையில், கழகக் கலைஞர்களிடையே போட்டி இருக்கட்டும்—ஆனால் பொறாமை வேண்டாம்!"

மீண்டும் அரிசி கள்ளக் கடத்தல்

தமிழக அரசின் தீவிரக் கண்காணிப்பு

கோவை, ஜூன் 2—

ஒரு மாதத்திற்குமுன் நின்றுபோயிருந்த அரிசிக் கள்ளக் கடத்தல், கோவை—பாலக்காடு எல்லைகளில் கடந்த இரண்டு வாரங்களாக மீண்டும் ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதைத் தடுப்பதற்குச் சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்தியும், சோதனைகளைத் தீவிரமாக்கியும் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கலெக்டர் அம்புரோஸ், பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

"கேரளத்தில் அரிசி பற்றாக்குறை கடுமையாக ஏற்பட்டதனாலும், விலைகள் ஏறியிருப்பதாலும் தான் கள்ளத்தனமாக அரிசி கடத்திச் செல்வது ஆரம்பமாகியிருக்கிறது" என்று அவர் கூறினார்.

சோதனைச் சாவடிகளில் லாரி லாரியாக அரிசி கைப்பற்றப்பட்டிருப்பதாகவும், கண்காணிப்புப் போலீசார் கேரளத்திற்குச் செல்லும் இரயில் வண்டிகளை போத்தனூரில் சோதனையிட்டு வருவதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தச் சோதனைகள் நல்ல பலன் தந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கேரள அமைச்சர்களின் 'அரிசித் தியாகம்'!

கோழிக்கோடு, ஜூன் 3—

கேரள அமைச்சர்கள் நால்வர், தாங்கள் அரிசி உணவு உட்கொள்ளுவதை நிறுத்தியிருக்கின்றனர்.

தொழில் அமைச்சர் டி. வி. தாமஸ், கல்வியமைச்சர் முகமது கோயா, மீன்பிடித் துறையமைச்சர் அகமது குரிக்கஸ், தொழிலாளர் நல அமைச்சர் மத்தாயி மஞ்சூரான் ஆகியோர்களே அவர்களாவர்.

கோதுமைப் பொருட்களை மட்டுமே இனிமேல் அவர்கள் உட்கொள்ளுவர்.

இத்தகவலை, கல்வியமைச்சர் முகமது கோயா வெளியிட்டார்.

இஸ்ரேலில் கூட்டு அமைச்சரவை

எதிர்க் கட்சித் தலைவர் பாதுகாப்பு அமைச்சரானார்

டெல் அவீவ், ஜூன் 3—

தற்போதைய நெருக்கடிநிலையைக் கருதி, இஸ்ரேல் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சியினரையும் சேர்த்துக்கொண்டு தேசிய அமைச்சரவையை அமைத்துள்ளது.

இதன்படி, எதிர்க் கட்சித் தலைவராக் இருக்கும் ஜெனரல் மோஷே டயான், பாதுகாப்புத் துறைக்கு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதுபோல், வேறு இரண்டு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த இருவரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இவரை அமைச்சரவையில் சேர்க்க வேண்டுமென்று பொது மக்கள் வற்புறுத்திவந்திருக்கின்றனர்.

குடிநீர் கோரி அறப்போர்

கர்னூல், ஜூன் 2—

கர்னூல் மாவட்டத்தில் 30 ஊர்களில் குடிநீர் கிடைக்கவில்லை.

"மக்களுக்குக் குடிநீர் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கோரி, ஒரு பெண் உள்பட 40 பேர் அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் ஆந்திர மாநிலத்தில் அலூர் வட்டத்தில் உள்ள ஓர் ஊரில் நடைபெற்றது.

அறப்போராட்டத்தின் தொடர்பாகக் கோரிக்கை முழக்கங்களுடன் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

"குடிநீர் நெருக்கடி தீரும்வரை அறப்போராட்டம் தொடர்ந்து நடைபெறும்" என்று இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த நீலம் இராமச்சந்திரையா கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரின் இந்தி வெறி

புதுடில்லி, ஜூன் 3—

"நான் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டேன்; ஆனால் ஆங்கிலம் தெரிந்த அமைச்சர் இந்தியில் பதிலளித்துள்ளார். அமைச்சர் ஆங்கிலத்தில் பதிலளிக்காவிட்டால், தமிழிலேயே நாங்கள் கேள்வி கேட்க அனுமதிக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவேன்"

என்று, தமிழகச் சுதந்தரக் கட்சி உறுப்பினர் எஸ். எஸ். மாரிசாமி மாநிலங்கள் அவையில் கூறினார்.

"இந்தியத் தேசிய மொழிகள் அனைத்தையும் பரப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா?"

என்று எஸ். எஸ். மாரிசாமி வினா எழுப்பினார்.

ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மத்தியக் கல்வித் துறைத் துணை அமைச்சர் பேராசிரியர் ஷெர் சிங், இந்தியில் பதிலளித்ததை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கடிந்துரைத்தனர்.

"இந்தி, ஆங்கிலம் இரண்டிலும் மொழி பெயர்ப்பிற்கு வசதி இருக்கும்போது, அந்த இரண்டில் ஏதாவது ஒரு மொழியில் பேச அமைச்சரை அனுமதிக்க வேண்டும்" என்று அவைத் தலைவர் வி. வி. கிரி கூறினார்.

"இந்திய மொழிகளில் எந்த மொழியில் பேசினாலும், கேள்வி கேட்டாலும், அவைகளுக்கு மொழி பெயர்ப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும்" என்று பூபேஷ்குப்தா கூறினார்.

"போதிய நிதி வசதி இருந்தால், இந்தியத் தேசிய மொழிகள் அனைத்திற்கும் மொழிபெயர்ப்பு வசதி செய்யவேண்டும் என்ற ஆலோசனையைச் செயற்படுத்தலாம்" என்று அவைத் தலைவர் திரு கிரி கூறினார்.

சென்னை—கூடுவாஞ்சேரி அரசினர் பஸ்

அமைச்சர் மு. கருணாநிதி துவக்கிவைத்தார்

கூடுவாஞ்சேரி, ஜூன் 3—

சென்னைக்கும் - கூடுவாஞ்சேரிக்குமிடையே இன்று அரசினர் பஸ் போக்குவரத்து துவங்கியது.

இன்று காலை 7 மணிக்கு, கூடுவாஞ்சேரியிலிருந்து முதல் பஸ் புறப்பட்டது. அந்த நேரத்தில் எதிர்பாராவிதமாக அந்த வழியே வந்த பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க, விழாவில் கலந்துகொண்டு, பஸ் போக்குவரத்தைத் துவக்கிவைத்தார்.

பதவி நீடிக்கிறது!

தமிழகத்தின் தற்காலிகக் க[illegible]னராக இதுவரை இருந்துவ[illegible] உஜ்ஜல் சிங், இப்போது நிரந்[illegible] கவர்னராக நியமிக்கப்பட்டிரு[illegible]கிறார்.

இப்போது ஜெய சாமரா[illegible] உடையார் பதவியிலிருந்[illegible] அறவே விலகிவிட்டதால், உஜ்ஜல் சிங்கின் பதவி நீடிக்கப்பட்டுள்ள[illegible]

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., [illegible]

திருவள்ளுவராண்டு 1998 வைகாசி 20 (3—6—67) சனி

கடுமையான கண்காணிப்பு வேண்டும்

உணவுப் பங்கீடு செயலாற்றப்பட்டு வருகின்ற சென்னை—கோவை ஆகிய இரண்டு நகரங்களிலும், ரூபாய்க்கு ஒரு படி வீதம் மக்களுக்கு அரிசி விற்கப்பட்டு வருகிறது. இந்த ஒரு படி அரிசி ஏற்பாடு நடைமுறைக்குவந்து பத்தொன்பது நாட்கள் நிறைவு பெற்றுவிட்டன.

இவ்விரண்டு நகரங்களிலும் நடைமுறையிலிருக்கின்ற ஒரு படி அரிசி ஏற்பாட்டினுல், ஆண்டு ஒன்றுக்கு நமது அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய இழப்பு ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் ஆகும். இவ்வேற்பாடு காலப்போக்கில் சிறுகச்சிறுக விரிவாக்கப்பட்டு தமிழகம் முழுதும் நடைமுறைக்கு வருகின்றபொழுது, இந்த இழப்புத் தொகை, ஆண்டு ஒன்றுக்குப் பன்னிரண்டு கோடியாக உயரக்கூடும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஏழை மக்களுக்கு நலம்பயக்கக்கூடிய திட்டம் என்ற காரணத்தால், இப்பெருந்தொகை இழப்பை, ஒரு பொருட்டாக நமது அரசாங்கம் மதிக்கவில்லை. 'அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்பட்டாலும் பாதகமில்லை; ஏழை மக்கள் நலமடைந்தால் அதுவே மகிழ்ச்சிக்குரியது என்ற உயர்ந்த நோக்கத்தில் நமது அரசாங்கம், இந்த ஒரு படி அரிசி ஏற்பாட்டைச் செயலாற்றுகிறது. இதுவுமன்றி, இதைத் தொடர்ந்து செயலாற்றி வரவேண்டும் என்பதிலும் மிகுதியான உறுதிகொண்டிருக்கிறது.

நெற்பயிருக்குத்தான் நீர் இறைக்கப்படுகிறது; ஆனுல், அந்த நீர் பாய்ந்து செல்லுகின்ற வாய்க்காலில் முளைத்திருக்கின்ற புல்லும், பயன்பெறத்தான் பெறும்; அதைத் தவிர்க்கமுடியாது. ஆனுல் வாய்க்காலில் உடைப்பு இருந்தால், அந்த உடைப்பின் வழியாகப் பயிருக்கு இறைக்கக்கூடிய நீர் வீணுகப் போவதுண்டு. அப்படி வீணுகப் போகின்ற நீரைத் தடுத்தே ஆகவேண்டும்; இதற்காக, வாய்க்காலிலிருக்கின்ற உடைப்பை அடைக்க வேண்டும். உடைப்பை அடைக்காமல் போனுல், இறைக்கின்ற நீரும் பாழாகி, பயிரும் சீரழியும்.

ஏழைகளின் நலத்தைக் கருத்தில்கொண்டே, ஏற்படக்கூடிய பெருந்தொகை இழப்பையும் பொருட்படுத்தாமல், 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்ற ஏற்பாட்டை, அரசாங்கம் செயல்படுத்தி இருக்கிறது. இந்த நிலையில், ஒரு படி அரிசி ஏற்பாட்டினுல் கிடைத்திடக்கூடிய நன்மை முழு அளவில் ஏழை மக்களுக்குப் போய்ச் சேராமல், சுரண்டல்காரர்களுக்குப் போய்ச் சேருகிறது என்ருல், அதை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? அதைத் தடுத்து நிறுத்த வகைசெய்யாமல் இருக்கமுடியுமா?

போலி ரேஷன் அட்டைகள் இப்பொழுதே ஏராளமாக இருந்துவருகின்றன. இதுபற்றிய தகவலை வேதனையுடன் நமது உணவு அமைச்சரே அறிவித்திருக்கின்ருர்.

போலி ரேஷன் அட்டைகள் பற்றி அறிவித்த அளவுடன் உணவு அமைச்சர் இருந்துவிடாது, அந்தப் போலி அட்டைகளைக் கண்டறிந்து, அவைகளை அகற்றுவதற்கான ஏற்பாட்டையும் செய்திருக்கின்ருர்.

அவசரக்கோலம் அள்ளித் தெளிப்பது என்பதுபோல், உணவு நெருக்கடி தலைகாட்டிய நேரத்தில், சென்னை நகரத்தில் அவசர அவசரமாகக் குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டன. உணவுப் பங்கீட்டைச் செயல்படுத்தத் துணிந்தபொழுது, நெருக்கடி நேரத்தில் கொடுக்கப்பட்ட குடும்ப அட்டையின் அடிப்படையில், அரசாங்கம் ரேஷன் அட்டை வழங்கியது. இரண்டாம் ரேஷன் அட்டை வழங்கியதற்கு, முதலில் வழங்கியதை அடிப்படையாகக் கொண்டது அரசாங்கம்.

நெருக்கடியான நேரத்தில் குடும்ப அட்டை கொடுக்கப்பட்டதனுல், சென்னையிலிருக்கின்ற குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையும், ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்திட்ட மக்களின் தொகையும் சரிவரக் கணக்கிடப்படவில்லை. உடனடியாகக் குடும்ப அட்டை வழங்கப்பட்டு, நகர மக்களுக்கு அரிசி கிடைக்க வகை செய்யவேண்டும் என்ற ஒன்றில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டது. குடும்பங்களின் மொத்தத் தொகையைப் பற்றி போதிய கவலை செலுத்தப்படாமல் விடப்பட்டுவிட்டது.

ரேஷன் அட்டை வழங்குவதற்கும் இந்தக் குடும்ப அட்டையையே அடிப்படையாகக் கொண்டதனுல், ரேஷன் அட்டை விவகாரத்திலும் போலி அட்டைகள் புகுந்துவிட்டன. இந்த முறையில்தான் போலி ரேஷன் அட்டைகள் இப்பொழுது உலவிவருகின்றன.

இத்துடன், போலி ரேஷன் அட்டைகள் பெருகியதற்கு மற்ருெரு காரணமும் உண்டு. ரேஷன் கடைக்காரர்கள், சில ரேஷன் அதிகாரிகளின் சலுகையைப் பெற்று, நூறு—இருநூறு என்ற அளவில், போலி ரேஷன் அட்டைகளைச் சொந்தமாக்கிக்கொண்டதும் ஒரு காரணமாகும்.

இந்தப் போலி ரேஷன் அட்டைகளினுல், ஏழை மக்களின் நன்மை ஒன்றை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு செயலாற்றப்பட்டுவருகின்ற ஒரு படி அரிசி ஏற்பாட்டினுல் ஏழை மக்கள் பயன்பெற்று வருவதோடு, சில வியாபாரிகளும் முறை கேடாக மிகுதியான இலாபத்தை அடைந்து வருகின்றனர். ஒரு ரூபாய்க்கு விற்கப்படவேண்டிய அரிசியை, இந்தப் போலி ரேஷன் அட்டைகளின் உதவியால் ஒன்றரை ரூபாய்க்கு விற்றுக் கொள்ளை இலாபம் அடித்துவருகின்றனர்—சில வியாபாரிகள்.

இந்த அக்கிரமத்தை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும். இத்துறையில் உணவு அமைச்சர், முழுக் கவலையைச் செலுத்த வேண்டும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பைப்போல், ஒரே நேரத்தில் சென்னை நகரத்திலிருக்கின்ற குடும்பங்களின் தொகையையும், ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கின்ற நபர்களின் எண்ணிக்கையையும் சீராகக் கணக்கிடவேண்டும். அக்கணக்கின் அடிப்படையில் ரேஷன் அட்டைகளைப் புதுப்பிக்கவேண்டும். இத்துடன், ரேஷன் அரிசி முறையாக விற்கப்பட்டு வருகிறதா என்பதையும் கடுமையாகக் கண்காணித்து வரச் சிறந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

—கா.க.

ஒருமைப்பாடு—ஒரு வழிப்பாதை!

"எந்தத் தொழிற்சாலை எங்கே இருந்தால் என்ன? இந்திய அரசாங்கம்தானே இருக்கிறது? இந்திய மண்ணில்தானே அமைந்திருக்கிறது? இதற்குப் போய் இவ்வளவு கசப்புணர்ச்சியா?"

இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கின்ற பெருமக்களுக்குக் காணிக்கை;—

பாதுகாப்புத் துறையினைச் சார்ந்த போக்குவரத்து ஊர்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்று—மராட்டியத்தில்—அகமது நகரில் இருக்கிறது. பல நிர்வாக வசதிகளையொட்டி அதனை ஆவடிக்குக் கொண்டுவர இந்திய அரசு ஏற்பாடுகள் செய்தது. அது கூடாதென்றும், மராட்டியத்திலேயே இருக்க வேண்டும் என்றும் நாடாளு மன்றத்துக்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெறும் ஆரரய்ச்சி நிலையத்தையே, 'நகர்த்தாதே' என்கிருர்கள் வடக்கே உள்ளவர்கள்!

நீண்ட நெடுங் கடற்கரை உடைய தென்னுட்டில் அல்லாமல் புதுடில்லியில் அமைந்திருக்கிறது கடற்படை இலாகா

இதுதான் ஒருமைப்பாடு! வடநாட்டாருக்கு வசதி செய்யும் ஒரு வழிப் பாதை!

வி. வி. கிரியும்—சாதிக் பாட்சாவும்!



"இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள் சென்னை வந்து மீண்டும் டெல்லி திரும்புகையில், தமிழக அமைச்சர்களும், அதிகாரிகளும், அவரை அங்கிருந்து வழியனுப்ப வேண்டிய சம்பிரதாயமான நடைமுறை நடைபெறவில்லை" என்று ஆடிஆடி விழுந்துகொண்டிருக்கும் காங்கிரசுக் கட்சிக்குத் தேடித்தேடிப் பொய்பேசி ஆதரவு தருவதாக 'முச்சந்தி'யில் நின்று முனகிக்கொண்டிருக்கும் பேர்வழி ஒருவர் பிதற்றியிருக்கிருர்.

'அய்யர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது' என்று புளித்துப்போன பழமொழியைத் தலைப்பு ஆக்கி அந்தப் புதுக் காங்கிரசு வீரர் புலம்பியிருக்கிருர்.

'தாமோதரன்'களால் தமுக்கடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அந்த முச்சந்தி' முட்டுச் சந்துகளில் வீசும் முடை நாற்றத்தைப் பரப்புவது தவிர, உருப்படியான நடமாட்டத்திற்கு உகந்ததாகவே இல்லை.

'அய்யர் வரும் வரை அமாவாசை காத்திருந்ததோ' இல்லையோ—அமைச்சர் சாதிக் பாட்சா வந்து குடியரசுத் துணைத் தலைவரை ஆரத் தழுவி மலர்மாலை அணிவித்து வணக்கம் கூறிய பிறகே இரயில் நகர்ந்தது!

"கிரியும் அவரைச் சார்ந்தவர்களும் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். மந்திரியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் உபராஷ்டிரபதியை ஸ்டேஷனில் வரவேற்ருர்கள்."

"மூன்ருவது மணி அடித்து 'கூ' வென்று கூவிக்கொண்டு இரயில் புறப்படும்வரை மந்திரி வந்து சேர

(4-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தி தொடர்ச்சி)

வில்லையாம். இரயில் சில கெஜங்கள் நகர்ந்தபிறகு, அது நகர்வதைப் பார்க்கத்தான் மந்திரி சாதிக் பாட்சா அங்கு வந்து சேர்ந்தாராம்."

இப்படி எழுதி, குழந்தைத்தனமாக நடந்து கொண்டிருக்கிறது—அந்த ஏடு!

புளுகுமணிகளின் பிரச்சாரத்தைக் காட்டிலும், புகைப்படம் நம்பத்தக்கது என்பது ஊரும் உலகமும் ஒருங்கே ஒப்புக் கொண்ட உண்மை.

அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், முறைப்படி—நாகரிகப்படி இரயிலடிக்கு வந்திருந்து, துணைத் தலைவர் கிரி அவர்களை வழியனுப்பினுர் என்பதைக் காட்டும், இந்தப் படம், பின்னணியில் இரயில் பெட்டியுடன் காட்சியளிக்கிறது.

பஞ்சாப் ஐக்கிய முன்னணியின் 'இதயசுத்தி'க்கு ஒரு சான்று!

அமைச்சர் அரிதுவார் லால் தேர்தல் கணக்கைப் பரிசோதிக்க நிபுணர் குழு

புதுடில்லி, சூன் 2—அண்மையில் அரியானு மாநிலம் 'பாதுர்கார்' தொகுதியில் கௌரவப் பிரச்சினையாக மதிக்கப்பட்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற கூட்டணி முன்னணி உறுப்பினர் அரிதுவார் லால் தேர்தல் கணக்கைப் பரிசீலனை செய்வதற்கு மூவர் கொண்ட துணைக் குழு ஒன்றை, கூட்டு முன்னணி அமைச்சரவை அமைத்துள்ளது.

இது குறித்து கூட்டு முன்னணிப் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டதாவது:—

"அரியானுவின் கல்வி அமைச்சரான அரிதுவார் லால், காங்கிரசு சார்புடைய ஆலை முதலாளிகளிடமிருந்து நிதி பெற்றுக்கொண்டதாகவும், தமது தேர்தலுக்குப் பணத்தைத் திரட்டும்படி குருக்ஷேத்திரப் பல்கலைக் கழகத்திற்கும், கல்லூரி முதல்வர்கள்—பேராசிரியர்கள்—தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்குக் கடிதம் எழுதியதாகவும், புகார்கள் வந்துள்ளன.

"இந்தத் தேர்தலின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்த கூட்டு முன்னணியின் கொள்கைகளுக்கு இது முற்றிலும் முரணுனதாகும்."

பல முறை கேட்டுக்கொண்டிருந்தும் மே 21-ஆம் நாள் நடந்து முடிந்த தேர்தலில் செலவிட்ட கணக்கை இன்னமும் அரிதுவார் லால் தாக்கல் செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

காங்கிரசு சார்பில் போட்டியிட்டுக் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற அரிதுவார் லால் அரியானு மாநிலக் கல்வியமைச்சராக இருக்கிருர்.

காங்கிரசைவிட்டு விலகிய அவர், கூட்டு முன்னணிக்கு இருக்கும் மக்கள் ஆதரவைக் காட்ட சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜிநாமாச் செய்து மறு தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்றவராவார்.

இடைத் தேர்தலில் இவர், காங்கிரசு வேட்பாளரைவிட 13,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றிருக்கிருர்.

சென்னைக்கு வீராணம் ஏரி நீர்?

சென்னைநகர மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கத் தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீர் கொண்டுவரும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு யோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இத் தகவலை முதலமைச்சர் அண்ணு அவர்கள், பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்கள்.

"வருகிற வரவு—செலவுத் திட்டத்தில் இதற்குத் தேவையான பணம் ஒதுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

வீராணம் ஏரி, தென்னுற்காடு மாவட்டத்தில் மிகப் பெரியதாகும்.

காவிரியின் கிளைநதியான கொள்ளிடம் மூலம் திருச்சிக்கு அடுத்து மேல் அணைக்கட்டிலிருந்து இதற்கு நீர்வருகிறது.

சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 4 கோடி காலன் தண்ணீரை வீராணம் ஏரியிலிருந்து கொண்டுவரத் திட்டம் தயாரிக்கப்படும்.

135 மைல் தூரத்திலுள்ள வீராணத்திலிருந்து குழாய் அமைத்து பம்ப் மூலம் இறைத்து நகருக்குத் தண்ணீர் கொண்டுவரப்படும்; வரும் வழியில் ஆங்காங்கே பம்பிங் நிலையங்கள் நிறுவப்படும்.

சிறிது காலத்துக்குமுன் தீட்டப்பட்ட திட்டத்தின்படி இதற்கு ரூ. 17.13 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் ரூ. 35 இலட்சம் இதன் நிர்வாகச் செலவுக்காகவும் தேவைப்படும்.

‘மத்திய அரசில் குவிந்துள்ள அதிகாரத்தைக் குறைப்போம்’

‘அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது’

பொன்மலையில் ம. பொ. சிவஞானம் முழக்கம்

“மாநில அரசை அடக்கியாளும் அளவுக்கு மத்திய அரசினர், அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்கின்றனர்! அதற்கேற்றாற்போல் அரசியல் சட்டத்தை இயற்றி இருக்கின்றார்கள்! அந்த அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்—அதற்குரிய நேரம் வந்துவிட்டது”

என்று, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள், பொன்மலையில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

இந்தப் பாராட்டு விழா உண்மையிலேயே மக்களுக்குத்தான் நடத்தப்படவேண்டும். வெள்ளையனை நாட்டை விட்டு விரட்ட மக்கள் எப்படிக் கொதித்தெழுந்து வீர உணர்வு கொண்டார்களோ அத்தகைய எழுச்சி — புத்துணர்ச்சி—தற்போது நடந்த தேர்தலில் மக்களிடையே ஏற்பட்டு, காங்கிரசு விரட்டியடிக்கப்பட்டது?

இந்தத் தேர்தலில், பூவராகனைத் தவிர மற்றவர்கள் இருந்த சுவடு தெரியவில்லை! அந்த அளவுக்கு மக்களுக்குக் காங்கிரசு மீது வெறுப்பு ஏற்பட்டு, காங்கிரசாரை விரட்டி விட்டார்கள்!

எந்தக் கோணத்தில் பார்த்தாலும், காங்கிரசுக்கு வீழ்ச்சியும் அவமானமும், தளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது.

மதிப்புக்குரிய பழைய முதலமைச்சர் பக்தவத்சலம், ‘அப்பாவி மக்கள், தி. மு. க.-வுக்குத் தவறி வாக்களித்து விட்டார்கள்’ எனப் பேசி இருக்கிறார்.

மக்கள், அப்பாவிகள் அவர்கள்—திட்டமிட்டுத் தீர்மானித்து, திடமாக ‘ஓட்டுப் போட்டுள்ளனர்! காங்கிரசுக்காரர்கள்தான் அப்பாவிகள்!

காங்கிரசு செய்த அக்கிரமங்களையெல்லாம் மக்கள், பொறுமையுடனிருந்து பார்த்துவிட்டுத்தான், விவேகத்துடன் தீர்ப்பளித்திருக்கிறார்கள்! மக்கள் செய்த இந்த மாபெரும் புரட்சியில்—இரத்தம் சிந்தாது காந்திய வழியில் நடைபெற்ற சனநாயகப் புரட்சியில்—மமதை கொண்டவர்கள் அழிந்துவிட்டார்கள்!

பண பலம்—பிரச்சார பலம்—ஆள் பலம்—அதிகார மலம்—இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டிருந்தும்கூட காங்கிரசாரால் வெற்றிபெற முடியவில்லை!

இலங்கைக்குப் போய் இராவணனையே வெற்றிகொண்டது போல், விருதுநகருக்கே சென்று அகில இந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசரையே வென்றிருக்கிறார் ஒரு சாதாரண மாணவர்! ஆனால், காங்கிரசார் இன்றும் தவறை உணரவில்லை! பல பேச்சாளர்கள் இன்றும் தாறுமாறாகப் பேசுகிறார்கள்—தரம் தாழ்ந்து பேசுகிறார்கள்!

இந்த நிலை நீடித்தால் அடுத்த தேர்தலில் காங்கிரசே இருக்காது!

‘கட்டபொம்மனைப் பாராட்டியவர் எட்டப்பனாக எப்போது மாறிவிட்டார்’ என்றெல்லாம் என்னை இழிவுபடுத்தி எழுதி வைத்தார்

அமைச்சர் கருணாநிதி டெல்லியில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்டபோது, தலைமையமைச்சர் இந்திரா, கருணாநிதியைப் பார்த்ததும் ‘சென்னை’யை மறந்து ‘தமிழகம்’ என்று சொல்லும் அளவுக்கு வந்திருக்கிறார்!

‘கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே’ என்பதுபோல், இந்திரா போன்றவர்கள், எதிர்க்கட்சியாகஇருந்தாலும் பாராட்டுகிறார்கள்!

இந்திரா தமிழ் நாட்டுக்கு வந்தால், நிச்சயம் தி. மு. க. ஆட்சியைப் பாராட்டுவார்!

காங்கிரசுக்காரர்கள் கனவு காண்பதுபோல், இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியாது—அசைக்க முடியாது!

‘ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கிறார்களே—எத்தனை நாளைக்குப் போடமுடியும்?’ என்று காங்கிரசார் கேட்கிறார்கள்.

இது, மருமகளைப் பார்த்து மாமியார், ‘எத்தனை நாளைக்கு இந்த மஞ்சள் குளிப்பு’ என்று கேட்பது போலுள்ளது!

‘மருமகள் மஞ்சள் குளிக்காமல் இருக்க வேண்டும் என்றால், மகன் சாகவேண்டுமே’ என்று தெரியாமல் புலம்பும் தாய் போல், காங்கிரசின் போக்கு இருக்கிறது.

தி. மு. க. ஆட்சியைக் கவிழ்த்துவிட்டால், காங்கிரசை மீண்டும் மக்கள் கொண்டுவந்துவிடமாட்டார்கள்! காங்கிரசின் அடிச்சுவடே தெரியாது அழித்து விடுவார்கள்!

‘டெல்லியைக் கேட்டா ஒரு படி அரிசி கொடுத்தாய்’ என்று சில பழைய மந்திரிகள் கேட்கிறார்கள்! கேட்டிருந்தால், ‘வேண்டாம்’ என்று மறுத்திருப்பார்கள்!

மக்களுக்கு உதவி செய்துவிட்டுப் பணம் கேட்டால் மறுப்பதா? ‘முடியாது’ என்று கூறுவதா?

இந்த நாட்டு மக்கள் வாட்டம் கொள்ளுகின்ற அளவுக்குப் போடப்பட்டுள்ள கோடிக்கணக்கான வரிப்பணத்திலிருந்து—‘திருப்பித் தாருங்கள்’ என்று கேட்டால், ‘தர முடியாது’ என்று கூறுவதா?

நம்முடைய பணத்தை வாங்கிக் கொண்டு நமக்கே இல்லை என்று கை விரித்தால்—வரிமேல் வரி போட்டு வசூலித்ததால், ‘வாழவே முடியாமல் ஏழ்மை நிலையிலுள்ள தொழிலாளர்களை — ஏழைப் பாட்டாளி மக்களை வாழ வைக்கும் தமிழக அரசின் திட்டத்திற்கு உதவ

காங்கிரசு ஆட்சியினரால்முடியாததை கழக ஆட்சி செய்து முடிக்கிறது!

பாராட்டவேண்டியவர்கள் தூற்றித் திரிவதேன்?

அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன் இடித்துரை

சென்னை, 26-வது வட்டம் பெத்துநாய்க்கன் பேட்டையில், கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கு, மலேசியா, சிங்கப்பூர் சுற்றுப் பயண வழியனுப்பு விழா நடைபெற்றது.

திரு. சி. மாசிலாமணி தலைமை வகித்தார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, பேசின் பிரிட்ஜ் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர். கண்ணன், முன்னாள் போலீசு கண்ணன், ஆர். கோவிந்தராசன், துரை முருகன், சி.எஸ். கணேசன், பூவை இராமலிங்கம், டில்லி ஆகியோர் பேசினர்.

திரு. என். வி. நடராசன் அவர்களும், திண்டுக்கல் தங்கவேலரும் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

திரு. என். வி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“அறிஞர் அண்ணா அவர்களும் திரு. இரா. செழியன் அவர்களும் மலேசியா சுற்றுப்பயணம் செய்தபோது, எதிர்க்கட்சியாக இருந்த தி. மு. கழகம், மக்கள் தொண்டாற்றி—மக்களின் நன்மதிப்பைப் பெற்று—கழகம் ஆட்சிமன்றம் ஏறுவதற்கு—தேர்தலில் கழகம் வெற்றி பெறுவதற்கு உழைத்த—அடிதளத்தில் இருக்கும் தொண்டர்களில் ஒருவன் என்ற முறையில், மலேசியா சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளேன்.

தி. மு. கழகம் ஆட்சிமன்றம் ஏறிய மூன்று மாத காலத்திற்குள், மாற்றாரும் பாராட்டும் வகையில் ஆட்சி செய்துவருகின்றோம்.

தி. மு. கழகம் தொடங்கியபோது அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், மற்ற தலைவர்களைப் பற்றியும் காங்கிரசாரும், மற்றவரும் பெரும் அளவுக்குத் தப்புக் கணக்குப் போட்டார்கள்.

‘தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியலுக்கே இலாயக்கற்றவர்கள்’ என்றார்கள்; 1957-ல் நாம் சட்டமன்றத்தில் இடம் பெற்றபோது, ‘சட்டமன்றத்தில் அமருவதற்குக்கூட இலாயக்கில்லாதவர்கள்’ என்றார்கள்—அலட்சியப்படுத்தினார்கள் — அச்சுறுத்தினார்கள்; கழகம் அவற்றைத் தாங்கிக் கொண்டு வளர்ந்தது—ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ளது.

தேர்தலுக்கு முன்பு, ‘பஸ் கட்டணத்தை ஏன் குறைக்கக் கூடாது?’ என்று அப்போது இருந்த அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களைக் கேட்டோம்; ‘குறைக்கக்கூடாது’ என்றார்; ‘உங்களுக்குப் பொருளாதாரம் தெரியாது’ என்றார்.

நாம் ஆட்சிக்கு வந்த 70 நாட்களில் பஸ் கட்டணம் குறைக்கப்பட்டது. கட்டணம் குறைக்கப்பட்டதால் அரசினர் துரித வண்டிகளில் கூட்டம் அதிகரிக்கிறது; நல்ல வசூல் கிடைக்கிறது.

பல வழிகளில் (‘ரூட்’களில்) இப்போது அதிகமான அரசினர் துரித வண்டிகள் விடப்பட்டுள்ளன. பஸ் தொழிலைத் தேசியமயமாக்க முயற்சி நடந்துகொண்டிருக்கிறது.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கும் திட்டத்தை அறிஞர் அண்ணாவும் உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகனும் பெரு முயற்சி எடுத்துச் செயலாற்றியுள்ளனர்.

‘ஒரு படி அரிசி போடமுடியுமா?’ என்றார்கள்; ‘போடுவதைப் பார்க்கலாம்’ என்றார்கள்; ‘இரண்டு நகர்களில்தானே போடுகின்றார்கள்?’ என்றார்கள்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்! அறிவுரைமேல் அறிவுரை சொன்னால் யாருக்கும் புரியவைக்க முடியும்! இப்போது, பக்தவத்சலம் ஒருவர் மட்டும், ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதை வரவேற்று—பாராட்டிப் பேசியிருக்கின்றார்!

சட்டமன்றத்தில், ‘மாண்புமிகு அமைச்சர் அவர்களே’ என்று அழைக்கப்படுவதும், ‘தமிழக அரசு தலைமைச் செயலகம்’ என்பதும், ‘தமிழகப் போக்குவரத்து’ என்பதும் கழகம் ஆட்சிக்கு வந்திருப்பதனால்தான் என்பதை நாடு அறியும்.

தமிழகத்திற்கு வந்திருந்த மைசூர் மாநிலச் சட்டமன்ற அவைத் தலைவர், ‘இந்தியாவிலே யாரும் துணிவாகச் செய்ய முடியாததைத் தமிழகம் துணிந்து செய்திருக்கிறது; ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதை கட்சி வேறுபாடு கருதாமல் எல்லாரும் பாராட்டவேண்டும்’ என்றார்.

வெளி மாநிலங்களில் உள்ளவர் ... பாராட்டுகின்றார்கள்;

கடத்தல்களைத் தடுத்து உணவுப் பற்றுக்குறையைப் போக்குவோம்

பொன்மலையில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி உரை

“ஒரு படி அரிசி போடுவதால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய மத்திய அரசிடம் உதவி கேட்பது தவறா? நமது பணம் கோடிக்கணக்கில் அவர்களிடம் செல்லுகிறது; இரயில்வே மூலம் ஏராளமாகக் கொடுக்கிறோம்; வருமான வரி அள்ளிக் கொடுக்கிறோம்; தபால் - தந்தி வழியாகக் கொடுக்கிறோம்; இப்படிக் கொடுக்கும் பணத்தைக் கேட்பது தவறா? கேட்க உரிமை இருக்கிறது — அதனால் கேட்கிறோம்.

“அது மட்டுமா? காங்கிரசார் பட்ட கடனுக்கு நாம் 22 கோடி ரூபாய் வட்டி கட்ட வேண்டும்; அதையாவது ‘தள்ளிக் கொடு’ என்று கேட்பது தவறா? இதுவும் இல்லை என்றால், பக்தவத்சலம், அழகேசன் போன்ற பெரும் புள்ளிகளைப் பாதிக்கும் வரி போட்டு ஏழைத் தொழிலாளிகளை எங்களால் வாழவைக்க முடியாதா?”

என்று தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் பொன்மலையில் நடந்த பாராட்டுப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:--

“நாங்கள் மார்ச் 15-ம் நாள் பதவி உறுதி எடுத்துக்கொண்டோம்; மே 15-ம் நாள் கோவையிலும்,சென்னையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டுள்ளோம். அரசின் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோம்.

இப்படி மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துவரும் போது, எங்களைத் தாக்கி—பொறாமை காரணமாக இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள் காங்கிரசுக்காரர்கள்!

‘ஒரு படி அரிசி திட்டத்திற்கு ஏன் டெல்லி உதவி செய்ய வேண்டும்?’ என்று இங்கேயுள்ள காங்கிரசார் கேட்கிறார்கள். டெல்லியே தங்கால்கூ...

—எவ்வளவு கோடி நட்டம் ஏற்பட்டாலும், ஏழைத் தொழிலாளர்களை வாழவைப்பதற்காக—இந்த நாட்டு மக்களின் பட்டினியைப் போக்குவதற்காக எதையும் செய்ய நாங்கள் தயாராகிவிட்டோம்! அதற்குண்டான திட்டம் எங்களிடம் உண்டு! பணக்காரர்கள்மீது வரி போட்டு, ஏழை உழைப்பாளிகளை வாழ வைக்க எங்களுக்குத் தெரியும்!

தமிழ்நாட்டில், ‘பற்றுக்குறை’ என்பதை நான் நம்பவில்லை: 40 இலட்சம் டன் உணவுப் பொருள் வெளியிடங்களுக்குக் கடத்தப்படுகின்றன. காங்கிரசுக் ஆட்சியில் கேரளம், மைசூர்,

நடக்க இருப்பவை -- பொதுக்கூட்டங்கள்

4--6--67

கடலூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மஞ்சை நகர் திடலில்; தலைவர் : எம். ஏ. சண்முகம்; பேசுவோர் : இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., கே. குமார், ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், கி. தண்டபாணி, வி. நடேசன், மற்றும் பலர்.

5--6--67

வயலூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-45 மணிக்கு; தலைவர் : துரைசாமி, பேசுவோர் : பெ. சௌந்திரபாண்டியன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., கு. வீ. முத்துசாமி, நாராயணசாமி, மாணிக்கம், வைரப்பெருமாள், ஆண்டியப்பன், இராசு, இராமு, கட்டையன்.

சோழவந்தான்

கே. வி. கே. சாமி படிப்பகம்—எம். ஜி. ஆர். மன்ற ஆண்டு விழா ; மாலை 6-மணிக்கு திருவள்ளுவர் திடலில் ; தலைவர்: எஸ். முத்துவேல் ; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., பி.எஸ். மணியன் எம்,எல்.ஏ., கூ. குருசாமி, மா. வேலன், கே. வி. பொன்னுசாமி, கோ. கிருட்டினன், கு. சுப்பையா, தமிழ்மாறன், ச. இராசு, கமால்தீன், அல்லாபிச்சை, முருகேசன், மதிமாறன்.

ஆம்பூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு முகமதலி திடலில் ; தலைவர் : ஆர். சம்பங்கி ; பேசுவோர் : மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., எம். பன்னீர்செல்வம் எம்..எல்.ஏ., எ. க. துரைசாமி, பி. தங்கராசு, ந. பா. சாரதி, மற்றும் பலர்.

6--6--67

மீஞ்சூர்

வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ; தலைவர் : என். வி. தங்கசாமி ; பேசுவோர் : துரைமுருகன், மு. கேசவன், பா.நாகலிங்கம் எம்.எல்.ஏ., அப்துல்லா, கே. வி. சாமி, மற்றும் பலர்.

மேல்வழித்துணையாங்குப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கோயில் திடலில் ; தலைவர் : எஸ். இராமலிங்கம் ; பேசுவோர் : மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., ஆர். சம்பங்கி, பி.செயராமன் எம்.எல்.ஏ., எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. எ. க. துரைசாமி, ஏ. வி. பச்சையப்பன், கே. வேணுகோபால்.

அந்தியூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு தேரடித் திடலில் ; தலைவர் : ஜே. தேவசகாயம் ; பேசுவோர் : மு. இராமநாதன், இ. எம். நடராசன் எம்.எல்.ஏ., தாயகம் சிவ. நடராசன், அம்மையப்பன், ஏ. ஆர். கோவிந்தசாமி, அ. வெற்றிவேல், அ. க. துரைராசு, மற்றும் பலர்.

குழுக் கூ[illegible]

காங்கிரசு முதலமைச்சரும் உணருகிறார்!

டில்லி ஆதிக்கம்-- பிரும்மானந்தரின் குமுறல்

மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்கள் காங்கிரசு ஆட்சியில் உள்ள மாநில அரசுகளைக்கூட மெல்ல மெல்லச் சிந்திக்க வைத்திருக்கின்றன!

இருக்கிற நிலையைப் பார்த்தால், தேசிய ஒருமைப்பாடு தவிடு பொடி ஆகும் காலம் வெகு தொலைவில் இராது என்றே தோன்றுகிறது.

பெங்களூரில் ஆந்திர முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டி (காங்கிரசு) பேசியிருப்பதே அதற்குச் சான்று.

"புதிய நிலங்களை விளைச்சலுக்குக் கொண்டுவராமல், ஆந்திரம் பிற மாநிலங்களுக்கு அரிசி வழங்கிக் கொண்டிருப்பதென்பது இனி இயலாத செயல்.

புதிய நிலங்களை பயிரிடத் தக்க வகையில் ஆக்கிட புதிய புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். மத்திய அரசின் உதவியின்றி மாநில அரசு தனியே செய்யும் திட்டம் அல்ல அது"

என்று கொஞ்சம் துணிச்சலுடன் பேசியிருக்கிறார் — பிரும்மானந்த ரெட்டி!

"ஆந்திரத்திலும் மக்கள் தொகை பெருகிக்கொண்டே இருக்கிறது; அதிக மக்கள், அரிசி உண்ணுகிறார்கள். இருக்கிற நிலங்களில் மட்டும் விளைகிற அரிசியை வைத்து வளர்ந்துவரும் மக்களுக்கு எப்படிச் சோறு போடுவது? எங்கள் மாநிலத்திலேயே அரிசி பற்றுக்குறையாக இருந்திடும்நிலையில், பிற மாநிலங்களுக்கு நாங்கள் எப்படி அரிசி தர முடியும்?"

என்று தம் நிலையை அவர் விளக்கியிருக்கிறார்!

பரந்த மனமுள்ள ஆந்திர முதல்வரின் போக்கைக்கூட (காங்கிரசுக்காரர் அகராதிப்படி), குறுகிய மாநிலப் பற்றுள்ளவராக மாற்றிவிட்டிருக்கிறது—மத்திய அரசின் கொள்கை!

அரசாங்க மாளிகையில் காமராசர்!

கட்சித் தலைவருக்கு அரசாங்க விடா?

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசருக்குப் புதுடில்லியில், அரசாங்கம் ஒரு மாளிகையைக் கொடுத்திருக்கிறது என்ற உண்மையை, மாநிலங்கள் அவையில் வீட்டு வசதித் துறை அமைச்சர் ஜகன்னாத ராவ் ஒப்புக்கொண்டார்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான வீடுகளில் முன்னாள் அமைச்சர்கள், பதவியிழந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வுபெற்ற அதிகாரிகள் ஆகியோர் தங்கியிருப்பது சம்பந்தமாகப் பிரச்சினை எழுந்ததை யொட்டி அமைச்சர் இந்தத் தகவலைத் தந்ததும், 'கட்சித் தலைவர்களுக்கு இப்படி அரசாங்கச் செலவில் வீடு தரலாமா' என்று கேட்டதற்கு, அரசியல் கட்சிகளுக்கு இப்படிச் சலுகை உண்டு' என்றார் அமைச்சர்.

ராஜ்நாராயண் (ச. சோ.):—"அப்படியானால், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்கு ஒன்றும் தரப்படவில்லையே?"

அமைச்சர் :—"திரு. பி. பி. மௌரியாவுக்குத் தரப்பட்டிருக்கிறது."

ராஜ்நாராயன் :—"திரு.மௌரியா, சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்காரரல்ல!"

இப்படி அரசாங்க விடுகளில், தம் பதவிக்காலம் முடிந்த பிறகும் தங்கியிருக்கும் பழைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் காங்கிரசுக்காரர்களே என்பதையும் ஒப்புக்கொண்டார் அமைச்சர்!

சிறு சேமிப்பு போர்டு

துணைத்தலைவராக எம்.ஜி.ஆர்.

சென்னை, ஜுன் 2—

'தமிழகச் சிறு சேமிப்புத் திட்ட போர்டின் துணைத் தலைவராகப் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறு சேமிப்பு போர்டுக்கு முதலமைச்சர் அண்ணா தலைவராக உள்ளார்.

வளங்கொழிக்கும் நாடுகள் கடமை

"தாராளத்தன்மை இல்லாத வளம் உலகத்தில் எங்கும் இருக்கக் கூடாது ; அப்படி இருந்தாலும், அதனால் எந்த நாட்டுக்கும்—எந்த மக்களுக்கும் நன்மை அளிப்பதாக இருக்காது.

"தாராளத் தன்மையுடன் இல்லாத நாடுகள்—பிறருக்கு உதவி செய்யாத நாடுகளில் உள்ள வளத்தால் அந்த நாடுகளுக்கே கூடத் தீமை ஏற்படும்—ஆபத்து ஏற்படக்கூடும்.

"ஒரு மூலையில் வளமும் இன்னொர் மூலையில் வறுமையும் இருந்தால், போட்டியும் பொறாமையும், பொல்லாங்கு ஏற்படுத்தும் பகைமையும்தான் உண்டாக ஏதுவாகும்.

"அமெரிக்க நாட்டாரின் உணவு உதவி, சிறந்த மனிதாபிமானத்துடன் செய்யப்படும்' உதவியாகும். தமிழக அரசின் சார்பிலும் உதவியளிக்குள்ள [illegible] ரினருக்கு நன்றி

என். வி. என். மலேசியா பயணம்

சென்னையில் சிறப்பான வழியனுப்பு

சென்னை, ஜுன் 3—

நேற்று மலேசியாவுக்குப் பயணமான கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுக்கும், திண்டுக்கல் தங்கவேலருக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறப்பான வழியனுப்பு நடைபெற்றது.

தமிழக அமைச்சர்களும் கழகத் தலைவர்களும் வாழ்த்தி வழியனுப்பினர்.

தி. மு. கழக தலைமை நிலையத்தின் சார்பிலும், 'நம் நாடு' நாளிதழ் சார்பிலும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் என். வி. நடராசன் மூன்று வாரம் சுற்றுப்பயணம் செய்வார்.

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பிலும், கிளைக் கழகங்கள்—சார்பு மன்றங்கள் சார்பிலும் மலர்மாலைகள்—கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

பிற்பகல் சரியாக 2-30 மணி அளவில் மீனம்பாக்கத்திலிருந்து புறப்பட்ட விமானத்தில் என். வி. நடராசன் அவர்களும் திண்டுக்கல் தங்கவேலரும் புறப்பட்டுச் சென்றனர்.

தமிழக அமைச்சர் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், சத்தியவாணிமுத்து, எஸ். ஜே. சாதிக்பாட்சா, எம். முத்துச்சாமி, மற்றும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அப்துல் சமது எம்.ஏ., எம்.பி. (முஸ்லிம் லீக்), நடிகமணி டி. வி. நாராயணசாமி, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., மேயர் இரா. சம்பந்தம், சென்னை மாவட்டத் தி.மு.க. செயலாளர் நீலநாராயணன், சேலம் மாவட்டத் தி.மு.க. செயலாளர் ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ. ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

மற்றும் துணைமேயர் டி. கிருட்டினமூர்த்தி, முன்னாள் மேயர் சி. சிட்டிபாபு எம்.ஏ., முன்னாள் மேயர் மைனர் மோசசு, அன்புச்செழியன் எம். பி., காஞ்சி மணிமொழியார், வழக்கறிஞர் வேலூர் நாராயணன் க. அறிவழகன் எம். பி., வேழவேந்தன் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., ஆலாலசுந்தரம், சி. என். ஏ. இளங்கோவன், கோவை கோவிந்தராசன் எம். எல். ஏ., இராசமாணிக்கம் எம். சி., கணபதி, நீலமேகம், சடகோபன், அலமேலு அப்பாதுரை, பெரம்பூர் பகுதித் தி.மு.க. செயலாளர் மாசிலாமணி, மாநகராட்சி மத்தியக் குழுத் தலைவர் சா. கணேசன், மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் சு. பாலன் சாமிநாதன், ஜேசுதாசன், எம். கிருட்டினன், நாகராசன், அரங்கநாதன், வெங்கடேசன், தி. சு. நல்லதம்பி, மோகனரங்கம், ஆர். டி. பாகஸ்ரன், பவளவண்ணன், சைதை சம்பந்தம், ஆறுமுகம், கோவிந்தசாமி, இராமதாசு, சானகிராமன் எம்.சி., இராமலிங்கம்,துரைமுருகன், அலி, முத்தாரம் தினகரன், இளங்கோவன் எம்.சி., பகுதிச் செயலாளர் எஸ். வி. வேலு, சக்கரபாணி, பழனிச்சாமி எம்.சி., சுபதேவன், திருவையாறு துரை, வையாபுரி, இராசகோபால், கோபால்சாமி, கே. எம். கண்ணபிரான், சாரங்கன், அரங்கசாமி, நயினார் முகமது எம்.ஏ., டாக்சி டிரைவர் சங்கப் பொதுச்செயலாளர் இரத்தினம், துணைத் தலைவர் இராமலிங்கம், சென்னியப்பன், கோதண்டபாணி, வீரபாண்டி, ஆறுமுகம் எம்.எல்.ஏ., முத்தெழிலன், லோகநாதன், குப்புச்சாமி, சேசாச்சலம், பாண்டியன், கண்

[illegible]

கரமாக அமைய வாழ்த்துத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் விலைவாசி!

வரிகளைக் கூட்டியதன் விளைவாய் விலைவாசிகளை 1963-ல் ஏற்றி இந்தியப் பொருளாதாரமே குலைந்திடும் நிலையை உருவாக்கிய அதே மொரார்ஜி தேசாய் தான், இப்போது மீண்டும் புதிய புதிய வரிகளை போட்டுப் பொது மக்களை அழுத்தி இருக்கிறார்!

விலைவாசி ஏற்றம் பற்றிய பேச்சு நாடாளுமன்றத்தில் எழுந்த போது, 'இந்த வரி உயர்வினால் விலை உயர, மாநில அரசு ஊழியர்கள் நிலை குலையும்' என்பதைச் சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்!

உடனே மொரார்ஜி சொன்னது என்ன தெரியுமா ?—"விவாசிலையாவது, இந்த வரி விதிப்பால் உயர்வதாவது? என்ன பேச்சு இது? காபி, டீ, அலுமினியம் போன்றவற்றின்மீது அதிக வரி விதிப்பின் விளைவாய் அவை விலை ஏற ஒட்டாமல் பார்த்துக் கொள்வேன்" என்பதுதான்!

உடனே திரு. எஸ்.எஸ். மாரிசாமி (சுதந்தரா) எழுந்து, 'வரவு—செலவுத் திட்டம் வெளியிடப்பட்ட அன்றே இந்தப் பண்டங்கள் விலை ஏகமாக உயர்ந்து விட்டதே! அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்?' எனக் கேட்டார்.

மொரார்ஜிதேசாய் :— "உதாரணத்துக்கு, தேயிலைமீதுள்ள வரி கிலோவுக்கு 12 காசே உயர்ந்துள்ளது; அதாவது பவுண்டுக்கு 5 காசுதான் ; அதாவது 100 கப் டீ போடக்கூடிய தேயிலைமீதான வரி உயர்வு 5 காசுதான் ; யாராவது சில ஓட்டல்காரர்கள் காபி, டீ அதிக விலையில் விற்றால், மதிப்புக்குரிய உறுப்பினர்கள் அதிக விலை தராமல் இருப்பதல்லவா அவர்கள் கடமை?"

பூபேஷ்குப்தா (வலது கம்யூ):— "இது, நல்ல கணக்கு; இது கணக்குத்தானா? பொருளாதாரமா? வரி போட்டவுடன், பண்டங்களின் சில்லறை விலைகள் அதிகமாக உயர்ந்து விடுகின்றனவே?

மொரார்ஜி :—"வரவு — செலவுத் திட்டம் பற்றி விவாதிக்கும் போது இதைப் [illegible]